RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt24111

OPEN ACCESS

# சங்கதி நாவல் காட்டும் பெண்ணடிமைத்தனம்

ப. ஞானமணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, திரு.ஆ.கோவிந்தசாமி அரசு கலைக்கல்லூரி, திண்டிவனம்-604307, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in the Novel Sangathi

P. Gnanamani [a, *]

[a] Department of Tamil, Thiru A Govindhasamy Government Arts College, Tindivanam-604307, Tamil Nadu, India

* Corresponding Author: pgnanamani@gmail.com

Received: 16-10-2023
Revised: 28-12-2023
Accepted: 10-01-2024
Published: 20-01-2024

Check for updates

**ABSTRACT**

One of the literary forms that emerged from the development of prose in the world is the novel. Novel is one of the best literary form for addressing social issues. It is impossible to create literature without leaving aside all the problems that women experience in general. Today women have progressed in all fields. However, women today are suffering from many things and are deteriorating. In today's modern times, despite the change in civilization, the status of women is still at low level. And there are many injustices done to 'Dalit' women. Dalit women are subjected to various atrocities by upper caste men and Dalit men. In this way, this article examines the injustices done to 'Dalit' women as described in Bama's Sangathi novel and about female slavery.

**Keywords:** Sangathi, Bama, Social Issues, Novel

## முன்னுரை

உலகில் உரைநடை வளர்ச்சியால் தோன்றிய இலக்கிய வடிவங்களுள் ஒன்று நாவலாகும். பல்வேறு இலக்கிய வடிவங்களில் சமுதாயப் பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கான ஆற்றல் வாய்ந்த இலக்கிய வடிவம் நாவல். பொதுவாக பெண்கள் அனுபவிக்கும் அத்தனைப் பிரச்சினைகளையும் ஒதுக்கிவிட்டு இலக்கியம் படைத்தல் என்பது இயலாது. இன்று பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளனர். ஆனாலும் பெண்ணினம் இன்று பல சிறுமைகளுக்கு ஆட்பட்டுச் சீரழிந்து வருகிறது. இன்றைய நவீன காலங்களில் நாகரீகம் மாறினாலும் பெண்களின் நிலை கீழ்மட்ட நிலையிலே காணப்படுகின்றன. அதுவும் 'தலித்' இனப்பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பல. மேல்வர்க்க ஆண்களாலும் தலித்திய ஆண்களாலும் 'தலித்' இனப்பெண்கள் பலவிதமான கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அவ்வகையில் பாமாவின் சங்கதி நாவலில் கூறப்பட்டுள்ள 'தலித்' பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பெண் அடிமைத்தனம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## தலித் இலக்கியம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிதாய் வந்த ஒன்றே தலித் இலக்கியம். தமிழ்நாட்டில் தலித் இலக்கியம் தோன்றக் காரணம் சாதி மோதல்கள் இல்லாத சமூகத்தை உருவாக்கும் முயற்சியே, 'தால்' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து உருவான 'தலித்' என்ற சொல் பிளக்கப்பட்ட, கூறு போடப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஆகிய பொருளில் வழங்குகிறது. உரிமைதேவை, சலுகை தேவை இல்லை என்பதே

இதன் குரல். சாதி அடிப்படையிலான சடங்கு, தீண்டாமை இவற்றை உடைத்தெறிந்து, தாழ்த்தப்பட்ட அனைவரையும் உணர்வு அடிப்படையில் ஒன்றிணைப்பதே இதன் நோக்கம். எந்த ஒரு இலக்கியப் படைப்பு ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த மக்களின், அவர்களது போராட்டங்களின் நாடித்துடிப்பை வார்த்தைகளில் வெளிப்படுத்த முனைகிறதோ அது ஒரு தலித் இலக்கியம் என அழைக்கப்படுவதற்கானா தகுதியைப் பெறுகிறது. மேலும் ஒரு தலித் இலக்கியத்தை தலித் மட்டுமே எழுத இயலும் தலித் அல்லாதவரும் எழுத இயலும் என்னும் இரு கருத்துக்கள் இன்று பொதுவாக நிலவுகிறது. அவ்வகையில் ஒரு தலித்தாக இருந்து, பலவிதமான சாதீய இன்னல்களை அனுபவித்து அடிமைத் தளைகளை உடைத்தெரியும் நோக்குடன் தலித்திய பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துக்கூறி 'சங்கதி' எனும் நாவலாக வடித்துத் தந்துள்ளார் பாமா.

## பெண்ணியம்

பெண்ணியச் சிந்தனை காலத்தின் கட்டாயத் தேவை எனலாம். பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதுடன் ஆணாதிக்கச் சமூகத்தில் பல நூற்றாண்டுகளாக நிலவிய சிந்தனைப் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம் எனப்படுகிறது.

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச்சொல் பெண்ணைக் குறிக்கும் 'Femina' என்ற லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பெண்ணியம் என்பது பெண்களின் எல்லா சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். பெண்ணியம் என்ற இயக்கமானது பெண்கள் தாமாக முடிவெடுத்து, அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையில் நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும். பெண்ணியத்தை குறித்து சார்லட் பன்ச் என்பவர் "பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும்". என்று கூறுவதாக பிரேமா குறிப்பிட்டுள்ளார். "பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்" என்று கார்டன் என்பவர் பெண்ணியத்திற்கு வரையறை கூறியுள்ளதாக முத்துச்சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் 'சங்கதி' என்னும் நாவல் முழுக்க முழுக்க தலித் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை குறித்தே கூறுகிறது.

## பாமாவும் சங்கதியும்

'சங்கதி' என்னும் தலித்திய நாவலின் ஆசிரியர் பாமா. இந்நாவல் 1994- ஆம் ஆண்டு வெளிவந்த பாமாவின் இரண்டாவது நாவல். 'சங்கதி' என்னும் இந் நாவல் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கருக்கு, வன்மம் முதலியன பாமாவின் பிற நாவல்கள் ஆகும்.

ஆசிரியர் பாமா 'சங்கதி' என்னும் தம் நாவலில் தாம் வாழ்ந்த சூழலில் உள்ள 'தலித்' மக்களின் பல்வேறு அனுபவங்கள் பற்றி வெளிப்படுத்தியுள்ளார். 'தலித்' இன மக்களின் கலாச்சாரம் வாழ்வியல் குறித்து பேச்சு மொழியிலேயே கூறும் பாமா குறிப்பாகத் தலித் பெண்களின் பிரச்சனைகள் குறித்து இந்நாவலில் கூறியுள்ளார் (Bama, 2017).

## ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி

தலிப் பெண்களுக்கு தலித் ஆண்களாலும் மேல் வர்க்க ஆண்களாலும் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து ஆசிரியர் ஆதங்கப்படுகிறார். தலித் இனத்திலேயே தலித் ஆண்களுக்கு ஒரு நியாயம், பெண்களுக்கு ஒரு நியாயம் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். சின்னநாட்டாமை, மாரியம்மாளுடன் தவறாக நடக்க முயற்சி செய்ய, மாரியம்மாள் பயத்தில் ஓடிவிடுகிறாள்.இதனால்

சின்ன நாட்டாமை அவள் மீது பொய் குற்றம் சாட்ட, ஊர் கூடி மாரியம்மாள், மாணிக்கம் இருவருக்கும் தண்டனையாக அபராதம் விதிக்கிறது. இங்கு மாரியம்மாளுக்கு இருநூறு ரூபாயும், மாணிக்கத்திற்கு நூறு ரூபாயும் அபராதம் விதித்து, "பொட்டச்சி தான் அடங்கி ஒடுங்கி இருந்துக்கணும் ஆம்பள ஆயிரம் செய்வான்"(பக்.25) என்று தீர்ப்பு கூறுகிறார்கள் (Bama, 2019).

மேலும் சாதிவிட்டுச் சாதி திருமணம் முடிப்பது பற்றி தலித் ஆண்களுக்கு ஒரு நீதியும், தலிப் பெண்கள் சாதிவிட்டு திருமணம் முடிக்கும் போது ஏற்றுக்கொள்ளாமல் பெண்களுக்கு மறு நீதியும் பற்றி பாமா சொல்லும்போது தலித் ஆண்களே தலித் பெண்களை ஒடுக்கும் முறை என்று பாமா சுற்றி உள்ளார்.

## வேலைக்கேற்ற கூலி மறுக்கப்படுதல்

பெண்கள் எவ்வளவு கடினமாக வேலை செய்தாலும் அவர்களுக்கு வேலைக்கேற்ற கூலி வழங்கப்படுவதில்லை என்றும் பாமா வேதனையுடன் கூறுகிறார்." பொம்பளைக்கெட்டயே ஆம்பள கொண்டு போயி வித்தம்னா அதுக்கு உண்டான வெலதான் என்று ஒரே விறகுக்கட்டினை ஆண் கொண்டு போய் விற்றால் கூடுதல் விளையும் அதையே பெண் கொண்டு போய் விற்றால் குறைந்த விலையும் உள்ள பெண் அடிமைத்தனத்தின் பல நிகழ்வுகளில் கூலிப்பிரச்சனையைச் சுட்டிக் காட்டும் பாமா "பொம்பளைக்கு எந்த வேலை செஞ்சாக்கூட கொறஞ்ச கூலிதான்"(ப.19)என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் பெண்கள் தங்கள் உழைப்பின் பலனையே மறுக்கப்படுகிறார்கள் என்னும் கருத்தை முன்வைக்கிறார் (Bama, 2017).

"ஆம்பளைகிட்ட அவஸ்தப்படுறது இல்லாம வேற சாதி பொம்பளகளாலயும் லோலுப் பட வேண்டியிருக்கு என்று தலித் பெண்கள் ஆண்களாலும் உயர் சாதிப் பெண்களின் பேச்சுக்களாலும் அவதிப்படும் நிலைமையையும் பாமா சுட்டுகிறார். மேலும் "எங்க பொம்பளைங்க வழக்கம் போல கூழுத் தண்ணியை குடிச்சிட்டு வேலை வெட்டிக்கு போயிட்டு வந்து பிள்ளையைப் பெத்துட்டு நாலு அஞ்சு நாள்ல மறுவடி வேலைக்கு ஓடனும். அப்படி ஓடுனாத் தான் கஞ்சி குடிக்க முடியும்". என்று தலித் பெண்களின் ஏழ்மையான வாழ்க்கை நிலையினை பாமா எடுத்துக்காட்டியுள்ளார்.

## வாய்ப்பு மறுக்கப்படுதல்

திருவிழாக்காலங்களில் ஊரில் "மைக்" வைத்து பாடுவதிலும் கூட பெண்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்பதனை, பொம்பளைகள்ள எத்தனையோ பேரு அம்புட்டு அருமையாப் பாட்டு படிப்பாக. ஆனா இது வரையல ஒரு பொம்பளையக்கூட பாட்டுப் படிக்க உட்டதுமில்ல, கூப்டதுமில்ல (ப.33) என்று பாமா கூறுவதில் இருந்து அறிய முடிகிறது.

எங்க ஊர்ல எல்லாத்துக்கும் பேறுகாலம் பாக்குறது எங்க பாட்டி தான். மேல் சாதிக்காருக மட்டும் பாட்டிய கூப்டமாட்டாக. பாட்டி பறைச்சிங்கறதுனால அவுக கூப்டமாட்டாக என்று பாமா கூறுவதில் இருந்து திறமைகள் இருந்தும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன என்பதை நாம் அறிய முடிகிறது. சரியான வாய்ப்புகளை தலித் மக்களுக்கும் அளித்தாள் அவர்களும் பல திறமையான செயல்களைச் செய்வர் எனும் கருத்தினை உணர முடிகிறது (Bama, 2019).

## பேச்சுரிமை மறுக்கப்படுதல்

சின்ன நாட்டாமை தான் செய்த தவறை மூடி மறைக்க செய்யும் நாடகத்தை நடத்தும் போது பெண்கள் பஞ்சாயத்து பண்ணவர இயலாமையாலும் சாதிய அடக்கு முறைமையாலும் உண்மை பேச முடியாமல் தலித்திய பெண்கள் தங்களுக்குள்ளேயே அநீதிக்கு எதிராகப் பேசுகின்றனர். பெண்கள் உண்மையை வெளிப்படையாகப் பேச உரிமை மறுக்கப்படுகிறது. வேற சாதி பொம்பளைகளைத் தொட அச்சப்படுவானுங்க. ஏம்னா அவுககிட்ட சாதிப்பவுரு, பணம் எல்லாம் இருக்கு நம்ம கிட்ட என்ன

இருக்கு? அவந்தொட்டாலும் அவன பகைச்சிக்கிட்டு நிக்க முடியாதுல்ல"(ப.128) என்று பாமா கூறுவதில் இருந்து தலித்திய பெண்களின் அடிமைத்தனத்தையும் இயலாமையையும் சுட்டிக்காட்டுகிறார்.

## பெண்கள் விழிப்புணர்வடைதல்

இப்படிப்பட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டும் என்னும் கருத்தையும் பாமா தாம் நாவலிலன் இறுதியில் முன் வைக்கிறார். "மண்ட மண்ணுல மடியுந்தட்டிக்கும் இம்சப்பட்டுக்கிட்டுத்தான் இருக்கணும். எங்கம்மா இப்படிச் சொல்லவும் எனக்குள்ள கோபம், வேகம், ஆங்காரம், ஆத்திரம் எரிச்சல், வெறுப்பு, இப்படி பல மாதிரியான உணர்வு வந்திச்சு(ப.49) என்று ஆதங்கப்படும் பாமா "நம்மளும் தெம்பா இருக்கணும். ஒரு ஆக்ரோசத்தோட சொதந்திரமா வாழனும்னா வைராக்கியத்தோட வாழ்ந்து காட்டணும்" (ப.67) என்னும் நம்பிக்கை ஊட்டும் கருத்துக்களையும் கூறியுள்ளார்.

"இதெல்லாம் தெருஞ்சுக்கிட்டப் பிறகும் நம்ம கண்ணுருந்துங் குருடங்க கெணக்கா வாழப்படாது. நம்ம நெலமய நம்ம மாத்தாட்டி வேற யாரு வந்து மாத்தப்போற"?(ப.149) "சம உரிமையோட வாழக்கூடிய காலம் பொறக்கும். அது பொறக்குற காலம் சீக்கிரமா வரப்போகுதுன்னு மனசுல படுது"(ப.150) என்று, பெண்கள் தங்கள் வாழ்வியல் முறையினை மாற்றிக் கொண்டு ஆண்களுக்கு நிகராக உரிமையுடன் வாழவும் பெண்களும் ஆண்களைப் போன்று கல்வி அறிவு உடையவர்களாக மாறவும் தலித்திய பெண்களுக்கு அழைப்பு விடுக்கிறார் பாமா. ஆவதும் பொண்ணாலே அழிவதும் பெண்ணாலங்கரது கெணக்கா" (ப.150) அநியாயத்தையும், ஏற்றத்தாழ்வுகளையும ஒழிக்க ஆண்களும் பெண்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் பாமா அறிவுரை வழங்குவதாக உள்ளது.

## முடிவுரை

பாமா "சங்கதி" என்னும் நாவல் மூலம் சமூகத்தில் அடித்தட்டு மக்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளை தெளிவாக எடுத்துக் காட்டி உள்ளார். சாதிக் கொடுமை, பெண் அடிமைத்தனம், தலித் அனுபவிக்கும் பிரச்சனை, பேச்சுரிமை மறுப்பு, வேலைக்கு ஏற்ற கூலி இல்லாமை, வாய்ப்புகள் மறுக்கப்படுதல் போன்ற பிரச்சனைகளை குறித்து பாமா தம் நாவலில் முன் வைக்கிறார். மேலும் பெண்களையும் ஆண்களைப் போன்று படிக்க வைத்து, ஆண்களும் பெண்களும் இணைந்து சம உரிமையோடு வாழ்ந்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும் அப்போதுதான் சமூகத்தில் அனைவருக்கும் சம உரிமை ஏற்படும் என்னும் விழிப்புணர்வையும் ஊட்டுகிறார் பாமா.

## References

Bama, (2017) Sangathi, Vidiyal Pathippagam, Chennai, India

Bama, (2019) Sangathi, New century Book house, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License